DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 2 of 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW- 1** |
| **Name** | **:** | புவனேஷ்வரி |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**10.9.2025**

**முதல் விசாரணை:**

நான் கிருஷ்ணாபுதூரில் குடியிருக்கிறேன், நான் கோத்தகிரி சென்டரல்பேங்கில் துப்புறவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். என் கணவர் பெயர் சுரேஷ் ஆகும், எங்களுக்கு 2 குழந்தைகள் உள்ளார்கள். என் அம்மா நாகம்மாவும், என் அப்பா செல்வகுமாரும் எங்களோடுதான் இருக்கிறார்கள். நாங்கள் இந்து அருந்ததியர் சமுகத்தை சேர்ந்தவர்கள் ஆவோம். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரி தர்மனை தெரியும்.

எனக்கு எழுத படிக்க தெரியாது, என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் நான் கையொப்பம் மட்டும் போட்டேன், அந்த கையொப்பம்

மட்டும் Exhibit P1. என் அம்மாவை ஆஜர் எதிரி தர்மன் அடித்துவிட்டதாக எனக்கு போன் செய்து சொன்னார்கள், அதனால் நான் கோத்தகிரி அரசு மருத்துவமனைக்கு போனேன், ராமசாமி என்பவர் புகாரை எழுதி கொண்டுவந்து என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றார், அந்த ராமசாமி தற்போது இறந்துவிட்டார். என் கையொப்பம் இருக்கும் புகாரில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது எனக்கு தெரியாது. நான் போலிசாரிடம் எதிரி தர்மன் என் ஜாதியை பற்றி திட்டியதாக நான் சொல்லவில்லை. எனக்கு இவ்வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் போலிசாரிடம் எதிரி தர்மன் என் ஜாதியை பற்றி திட்டியதாக நான் சொல்லவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்ததன் பேரில், அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**:

நான் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் 27.3.2024ஆம் தேதி காலை 11.00 மணிக்கு பேங்கில் வேலை செய்து கொண்டு இருந்தபோது எனது நாத்தனார் மணிமேகலை எனக்கு போன் செய்து அன்று காலை 10.00 மணிக்கு அவர் தனது வீட்டிற்கு வெளியே துணி துவைத்து கொண்டு இருந்தபோது, எங்கள் வீட்டிற்கு பின்புறம் குடியிருக்கும் ஆஜர் எதிரி தர்மன் எங்களுக்கு சொந்தமான பொது ஓட்டு சுவரில் ஆட்களை

வைத்து புதிதாக செங்கல் கட்டிடம் கட்டி கொண்டிருந்தார் என்றும், அதை பார்த்த என் அம்மா நாகம்மாள் எதிரி தர்மனிடம் எங்களிடம் கேட்காமல் பொது சுவரில் புதிதாக கட்டிடம் கட்டுகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு எதிரி தர்மன் என் அம்மாவை பார்த்து கெட்ட வார்த்தைகளாலும், ஜாதியை சொல்லியும் தேவிடியா, சக்கிளிய நாயே என்று திட்டி தனது கையால் என் அம்மாவின் தலை மற்றும் முதுகில் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், அதனால் என் அம்மாவிற்கு கை, முதுகு மற்றும் தலை பகுதிகளில் அடிப்பட்டதாகவும் சொல்லிவிட்டு, தற்போது நாங்களும், எதிரியும் சமாதானமாகிவிட்டதால், எதிரியை காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.09.10 16:40:32 +0530